DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 257/2020** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW – 2 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | **ராம்கி** |
| Father's Name | : | **ரவிசந்திரன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.04.2023.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ள நந்திமங்களம், கம்பன் காலனி தெருவில் வசித்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். ரஃபிக் (எதிரி) எனது நண்பர் ஆவார். கோவையில் உள்ள ஸ்ரீராம் டிராவல்ஸ் பஸ்சில் நானும், ரஃபிக்கும் டிரைவராக வேலை செய்து வந்தோம்.

2) கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் ஸ்ரீராம் டிராவல்ஸ் பஸ்சை எதிரி ரஃபிக் ஓட்ட அவருடன் அக்டிங் டிரைவராக நானும், நடத்துனர் தரணிதரன் என்பவரும் கோவையில் இருந்து சென்னைக்கு சென்றோம்.

3) சென்னையில் இருந்து கோவைக்கு சென்னை- சேலம் பைபாஸ் ரோட்டில், வந்துகொண்டிருக்கும் பொழுது விடியற்காலை 05.00 மணியளவில் ஆத்தூரை தாண்டி கொத்தாம்பாடி கல்யாண மண்டபத்திற்கு எதிரே சென்று கொண்டிருந்தபொழுது ஆம்னி

பஸ் ஒன்று சென்றது. எங்களுக்கு முன்னால் சென்ற ஆம்னி பஸ் எங்களுக்கு முன்பாக சென்ற லாரியை ஓவர் டேக் செய்து, போனது.

4) அந்த ஆம்னி பஸ்சிற்கு வழி இருந்ததால் கட் செய்து போய்விட்டது. பின்னால் வந்த, எங்கள் வாகனத்திற்கு வழி இல்லாததால் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. கால் கட்டை விரலில் லேசான காயம் ஏற்பட்டுவிட்டது. நடத்துனர் தரணிதரனுக்கு மண்டையிலும், முகத்திலும் அடிப்பட்டது. எங்கள் வாகனத்தில் வந்த பயணிகள் யாரும் காயம் அடையவில்லை.

5) காயம்பட்ட தரணிதரனை சிகிச்சைக்காக அழைத்துச்சென்றேன். மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சேர்த்தேன். தரணிதரன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.

6) விபத்து குறித்து தரணிதரணின் அம்மாவிற்கு தகவல் சொன்னேன். விபத்து குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எங்களுக்கு முன்னால் சென்ற ஆம்னி பஸ் ரோட்டில் நின்றிருந்த ஒரு லாரியின் மீது உரசி சென்றது என்றால் சரிதான். எங்களுக்கு முன்னால் சென்ற ஆம்னி பஸ் ரோட்டில் நின்றிருந்த லாரியை கட் பன்னி சென்ற பிறகுதான் நின்றிருந்த லாரி எங்களின் பார்வைக்குப்பட்டது என்றால் சரிதான்.

2) லாரி தார்ரோட்டில் நின்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். நின்றுகொண்டிருந்த லாரியின் இன்டிக்கேட்டர், எச்சரிக்கை விளக்கு ஏதேனும் போடப்பட்டிருந்ததா என்றால் இல்லை.

3) எதிரி வாகனத்தை மெதுவாகத்தான் இயக்கி சென்றால் என்றாலும், முன்னால் சென்ற ஆம்னி பஸ் திடீரென வளைத்து சென்றதால், ரோட்டில் நின்றிருந்த லாரி தெரியாமல் மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

4) இந்த விபத்திற்கு லாரியின் ஓட்டுனர்தான் காரணம் என்றால் சரிதான். விபத்து நடக்கும்பொழுது எத்தனை மணி இருக்கும் என்றால் விடியற்காலை 05.00 மணி இருக்கும். சம்பவம் நடந்தது 2 வது மாதம் தைமாதம் பனிபொழிவு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

5) பனிபொழிவு சமையத்தில் முன்னால் செல்லும் வாகனம் அல்லது நிற்கும் வாகனத்தில் ரெட் லைட் போடப்பட்டிருந்தால் மட்டும் தான் முன்னால் செல்லும் வாகனம் இருப்பது தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.